A. R. T.

St. Francis Xavier's High School

PALAMCOTTAH

செய்யுட் கோவை

PRINTED AT

THE PALAMCOTTAH PRINTING PRESS

1922

கடவுள் வாழ்த்து

ஆதியீ றில்லான் றன்னை யமைத்தகா ரணமொன் றில்லான்
கோதிலான் கணத்துளண்டங் கோடிசெய் தழிக்கவல்லா
னேதிடு மொப்பொன் றில்லா னுருவிலா னுருவின்டங்குஞ்
சோதிதன் னிழலாக்கொண்ட சோதியைத் துதியாய்நெஞ்சே. 1

ஆணலன் பெண்ணுமல்ல னஃறிணை யலன்பாலல்லன்
சேணலன் புனல்காலல்லன் றீயல னைம்புலத்தாற்
காணரும் வடிவனித்தன் கத்தனம் மத்தன்சுத்தன்
மாணற முருக்கொண்டன்ன மாட்சியான் கடவுணெஞ்சே. 2

(நீதிநூல்)

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. 3

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். 4

(திருக்குறள்)

தமிழ்ச்சிறப்பு

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ. 1

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்பு பெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர். 2

(திருவிளையாடற் புராணம்)

1. கடைச்சங்க இலக்கியம்

A. எட்டுத்தொகை

புலவரை யிறந்த புகழ்சா லோன்ற
னிலவரை யிறந்த குண்டுகண் ணகழி

வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரமபயில் கடிமிளை
யருங்குறும் புடுத்த கானப்பே ரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
விரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலு
மாடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
யிகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே. 1

(புறநானூறு)

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூ
லளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார்மார்பிற்
போரடு தானைச் சேரலாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே
கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவு

184345

மாரியர் துவன்றிய பேரிசை யிமயந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

(பதிற்றுப்பத்து)

B. பத்துப்பாட்டு

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேல
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றுகச் சிறுகொடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
யிணைத்த கோதை யணைத்த கூந்தன்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்கு றிளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
றகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி

184345

மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று.

(திருமுருகாற்றுப்படை)

C. பதினெண் கீழ்க்கணக்கு

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். 1

நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப் பார். 2

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசை கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில். 3

ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே—ஓவாது
நின்றுனாற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாட்கள்
சென்றன செய்வ துரை. 4

தோர்போர்வை மேலுந் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும். 5

விளக்குப் புகவிருள் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்மு னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது. 6

தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி

அடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர். 7

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்த றகுதிமற் — றேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும். 8

இல்லா விடத்து மியைந்த வளவினால்
உள்ள விடம்போற் பெரிதுவந்து — மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு. 9

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. 10

செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும் — மெய்பாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு பந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும். 11

செந்நெலா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெலே யாகி விளைதலா — லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு. 12

(நாலடியார்)

வேறு

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 1

செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 3

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 4

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. 5

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. 6

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 8

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 9

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். 10

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும் 11

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 12

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும். 13

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. 14

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 15

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. 16

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு. 17

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வர் ராசையுட் பட்டு. 18

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. 19

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். 20

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 21

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். 22

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. 23

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 24

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும். 25

பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று. 26

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். 27

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. 28

(திருக்குறள்)

2. காவியம்

1. சிலப்பதிகாரம்

முடியுடை வேந்தர் மூவ ருள்ளுந்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோ
ரறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தந்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலு
மாங்கு மாடலூர் தூக்கும் வரியும்

பரந்திசை யெய்திய பாரதி விருத்தியுந்
திணைநிலை வரியு மிணைநிலை வரியு
மணைவுறக் கிடந்த யாழின் றொகுதியு
மீரேழ் சகோடமு மிடநிலைப் பாலையுந்
தாரத் தாக்கமுந் தான்றெரி பண்ணு
மூரகத் தேரு மொளியுடைப் பாணியு
மென்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித தோன்றுந் தனிக்கோ ணிலைமையு
மொரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்க்காண்டம் முற்றிற்று.

2. தேம்பாவணி

சீரிய உலக மூன்றுஞ் செய்தளித் தழிப்ப வல்லாய்
நேரிய வெதிரொப் பின்றி நீத்தவோர் கடவு ளுய
வேரிய கமல பாதம் வினையறப் பணிந்து போற்றி
யாரிய வளன்றன் காதை யறமுதல் விளங்கச் சொல்வாம். 1

தேவுல கிறைஞ்சுஞ் சூசை தேன்மலர்க் கொடியைப் பூத்து
மூவுல கனைத்து மெஞ்சா முறையொடு நிழற்று நாதன்
பூவுல கெய்தி யன்ன பூநிழற் கொடுங்கிச் சாய்ந்த
யாவுல கனைத்தும் வாழ்த்து மிருங்கதை யியம்பல் செய்வாம். 2

சூசையுற் றனவ ரங்க டுய்கடல் கடக்க வில்லா
லோசையுற் றெழுக மிர்த முடைகட லென்ன நண்ணிப்
பூசையுற் றதனை நக்கப் புக்கென வுளத்தைத் தூண்டு
மாசையுற் றாமு னேனு மருங்கதை யறைய லுற்றேன். 3

அடவிபால் வனப்பில் வாய்ந்த ஆகிர்த வெனுநகர்க் குட்
புடவியா லுவமை நீத்த புகழ்வாய்த் துயர்ந்த கன்னி
நடவியார் தவத்தி லோங்கி நாதனை யீன்று டானைத்
தடவியார் வுயரப் போற்றித் தகவடைந் திருந்தா ளன்றே. 4

இளங்கொடி மாட்சி காட்ட வினியதன் ஞமந் தந்து
வளங்கொடு நட்பு காட்ட வரைவில வாங்க ளீந்தாள்
விளங்கொளி யுடுத்த மேனி வெண்மதி மிதித்த பாத
முளங்குடு சூட்டுஞ் சென்னி யுடையவள் பரம தாயே. 5

இன்னவை மகளுந் தாயு மிணையென நடத்து-
பன்னவை யறுந்தன் பூமான் பழங்கதை யுரைத் துரைத்த
வன்னவை யெவருங் கேட்ப வவைவரா கென்று டாயுஞ்
சொன்னவை மகளு மன்ன துணிவொடு வரைந்திட் டாளே. 6

வருந்திய நசையா ளுனும் வரைந்தவை வரைந்து காட்டத்
திருந்திய தமிழ்ச்சொ லில்லாற் செவிப்புலன் கைப்ப நல்லோர்
பொருந்திய குறைக ளெக்கிற் புரைந்தமட் கலத்தைப் பாரா
தருந்திய வமுது நன்றே லருத்தியோ டருந்தல் செய்வார். 7

சீரிய மறை நூற் பூண்ட செழுந்தவத் தரிய மாட்சி
நேரிய வுளத்தி லோங்கி நேமிகாத் தவனைக் காத்த
வேரியங் கொடியோன் காதை விளம்பவக் கொடிவிள்பைம்பூ
வாரிய னூரிற் றேம்பா வணியெனப் பிணித்தல் செய்வாம். 8

(சிறப்புப்பாயிரம்)

புள்ளு லாம்விசும் பிடைதொறும் பொரும்படை பொருவ
வெள்ளு லாமழை வெண்கொடி யுருக்கொடு விளங்கித்
தெள்ளு லாந்திரை திளைப்பவுண் டெழுந்துயர் பரந்து
வள்ளு லாங்கரு மதகரி யினமெனத் தோன்ற. 9

போர்புறங்கொடு பொருந்தல ருரத்திறேய்த் தொளிர்வேற்
சீர்புறங்கொடு திசைதொறு மிருளற மின்னி
வார்புறங்கொடு வளர்முர சொலியென வதிர்ந்து
நீர்புறங்கொடு நீண்முகின் முழங்கின மாதோ. 10

படையெனச் செருப் பகைதரப் படர்ந்தன வல்லாற்
கடையெனச் செறி கருணையோ டுளுற்றிய வள்ளர்
கொடையெனச் செழுங் குன்றொடு வயின்றொறுங் குளிர
மிடையெனச் சொரி வியன்முகில் வரைவில் பொழிவ. 11

படித்த நூலவை பயன்பட விரித்துரைப் பவர்போ
றடித்த நீண்முகி றவழ்தலை பொலிந்தபொன் மலையே
குடித்த நீரெலாங் கொப்புளித் தமுதென வருவி
யிடித்த ருவொலி யெழத்திரை யெறிந்துருண் டிரிவ. 12

புள்ளி மால்வரை பொன்னுல கிடத்தெடுத் துய்த்த
னுள்ளி வான்விடு வடமெனத் தாரைக ளொழுக
வெள்ளி நீண்டொடர் விசித்தனைப் பிடித்தெனச் சூழத்
துள்ளி வீழுயர் தூங்கிய வருவியின் றோற்றம். 13

... பழ நதிவிஞற் பெருகி
... தழுஞ் சோலையுங் கழனியு நிறைய
வளைகிடந்திழி வனம்புன லெங்கணு முலவல்
திளைகிடந்துயிர் சிர்த்துறப் புலாவிய போன்றே. 14

அஞ்சி லாவெதி சடுக்கிய கல்லெலாங் கடந்தே
யெஞ்சி லாவெழி லிமைத்தநீண் மருதமு நீக்கித்
துஞ்சி லாநதி தொடர்ந்தகல் கருங்கட லுைக்கல்
விஞ்சை யாரெலாம் வெறுத்துவீ டிவறிய போன்றே. 15

(நாட்டுப்படலம்)

செல்செயுஞ் சாப நீக்கச் செஞ்சுடர் சாபஞ் சேர்கால்
கொல்செயுஞ் சாப நீக்கிக் கூவெலா முறவாய்ப் பாவத்
தல்செயுஞ் சாப நீக்க வாண்டகை மகரஞ் சேர்ந்து
ளெல்செயுங் கன்னி நீக்கி யிளவலா யுதித்தல் சொல்வாம். 16

மாயிரு ஞாலங் கொண்ட மருட்கினைந் தழுத வானங்
காயிரு மிடர்தீர் காலாய்க் களித்தென மாரிக் காலம்
போயிரு புடையிற் செந்நெல் பொதிர்ந்தமார் கழிநா ளையைந்
தாயிரு வுலகு மோங்க வாண்டகை யுதித்த லோர்ந்தான். 17

பழியெலா நீக்கி நீங்காப் பகைமுதிர் கொடுங்கோ லோச்சி
யழிவெலாம் பயத்த பேய்வென் றமலனு மகரு மொன்று
யிழிவெலா மொழிந்து வீக்க விளவலாய்ப் பிறந்த நாத
னுழியெலா முனைவற் றெங்கு மொருகுடை நிழற்றிற் றன்றே. 18

நிலமுறை பகையைச் சீக்கி நிகரிலொத் தவியா னென்பான்
வலமுறை யொருவ னுண்ட வளமையாற் செருக்குற் றெங்கும்
பலமுறை பிரிந்த யாரும் பண்டுறை காணி யூர்போய்க்
குலமுறை யிறையு மெண்ணுங் கொணர்ந்திடப் பணியிட்டா
னே. 19

இப்பணி கேட்டு வேதத் தெழினுதற் றிலத மொப்ப
வொப்பணி கடந்த சூசை யுளத்தழற் புகுத்தி னற்போல்
வெப்பணி யுயிரு லாவும் வெய்துற லாற்ற மொய்கொ
ளப்பணி யுலக வேந்தி னன்னையை நோக்கிச் சொல்வான். 20

மன்னவ னுலகி லெங்கும் வகுத்ததோர் பணியீ தன்றே
பின்னவன் பணித்த வாற்றாற் பெத்திலே மென்னும் வாய்ந்த

வென்னகர்க் கிறையு மெண்ணு மீவதற் கேகல் வேண்டு
மன்னதற் கடியேன் செய்யு மாவதென் றருளிச் செய்வாய். 21

விண்டல மகத்து வேந்தர் வேந்தனு முனது மைந்தன்
மண்டல மகத்துத் தோன்றி மனுமகன் பிறப்ப நாளாய்த்
தண்டலை யகத்து விள்ளுந் தாதினு நொய்தா னீயுங்
கண்டக மகத்தென் னோடு துணைவரக் கருத லாமோ. 22

மின்னிநா விடிவெற் பீர்ந்து வேறிரு கூறு செய்வ
துன்னிநா னுய்ய லாற்றே னொருகொடி பிரிந்து போகின்
முன்னிநா னடைநோய் நீக்க முதல்வற்கேட் டவன்செய் யேவல்
பன்னிநான் செய்வ தென்னோ பகர்தியே யென்றான் கூசை. 23

என்றருமா மறைவடிவ மேந்துதவ னிவைகூறப்
பின்றருயா வையுமுணர்ந்தும் பேரிறையோன் றனைதாங்கு
துன்றருமா மாட்சிமையா டன்றுணைவன் சொற்பணிய
வன்றருமா மகவினைத்தாழ்ந் ததற்கியற்றும் பணிகேட்டாள் 24

கேட்பதருந் தயைக்கிறைவன் கேட்டுரைத்த திருவுளமே
கோட்பதருங் குணக்கிழத்த கொழுநனுளத் தெழச்சொல்லி
வேட்பதரு மணமணத்த வுயிரிரண்டும் வேறாக
வாட்பதரு நயத்திருவர் மாநகர்க்கே குதுமென்றாள். 25

தேனிகர்சொற் செவிமாந்தச் செழுந்தவத்தோ னுளத்தேங்கி
மீனிகர்பொற் சிவிகையுமால் வேழமும்பாய் பரிமாவும்
வானிகர்பொற் றிண்டேரும் வறுமையர்க்கில் லாமையினீ
கானிகர்முட் டடத்தேகக் காண்டலுளம் பொறுப்பரிதே. 26

தொன்மாண்ட புடைநகரிற் றுற்றியபின் னுங்குறையும்
பொன்மாண்ட முடித்தாவிற் பொலிவமைந்த வெங்குலத்தோர்
வன்மாண்ட வருட்புரிந்து வந்ததுய ராறுமெனத்
தன்மாண்ட வுளத்திதுவே சார்பெனத்தா னுணர்ந்தானே. 27

மாண்டகையா ரறன்சார்வா ரல்லதின் மனுச்சாரா
பாண்டகையா ரருட்சாரார்க் கல்லதொரு துயர்சாரா
சேண்டகையா ரிவன்சார்பாற் செல்லுதுநா மெனவானோர்
பூண்டகையா லறஞ்சார்ந்தான் புரைசாராப் புகல்செய்
தாள். 28

குவட்டாய வெள்ளநிகர் கூர்த்துவகை பெருகியெழத்
துவட்டாத தூயதவனுந் துணைவியெனு மாயிழையு

முவட்டாத பணிமுறையாற் செல்லிவன வுணர்வுற்றார்
சவட்டாத வன்புரிமைச் சால்பினிரண் டன்றிலொத்தார். 29

பூண்மின்னு மணிப்பேழை போன்றநுஞ்சூன் முற்றணிந்
-தாள்.
கோண்மின்னு முடிதாழக் கொழுநனைத்தான் றொழவவனு
மாண்மின்னு மனம்வெருவி வணங்கப்பின் பிருவர்தொழுந்
தாண்மின்னு மகன்றந்த வாசியொடு தடங்கொண்டார். 30

அருள்வீங்கும் விண்ணரசாட் காயினவா யிரான்றி.
பிருள்வீங்குந் துகடுடைத்தோன் பிறக்குங்கா லெனவின்னும்
பொருள்வீங்கு மும்பரொன்ப தாயிரரும் புடைதிரிந்த
தெருள்வீங்குங் கதிர்பாய்ப்பிச் செலவிட்டான் முதலோனே 31

பிறைபழித்த பொற்பதத்தாற் பிறைமிதித்தா டனைச்சூழப்
பொறைபழித்த தோட்டிறத்திற் பூண்டவழச் செஞ்சுடரை
நிறைபழித்த வுருச்சூட்டி நிரைநிரைவிண் ணோரிறைஞ்சி
யுறைபழித்த மலர்மாரி யுந்தரத்திற் பொழிகின்றார். 32

வஞ்சத்தார் மனம்போல விருண்டவிரா வாட்டுமொளி
விஞ்சத்தா ரணியறியா வெயில்வெள்ள மும்பருகத்
தஞ்சத்தார் தவஞ்செய்தோர் தகைபோல விவர்க்கிருள்கு
ழெஞ்சத்தா மிரவுபக லென்றறியா தேகுகின்றார். 83

புண்காத்த மருந்தன்ன பொலியருட்சேர் மாதவனும்
விண்காத்த வேந்தனைச்சூல் வேய்ந்தொவ்வாக் கன்னிகையும்
மண்காத்த வருள்பரப்பி வழிவருங்கால் வளைத்திவரைக்
கண்காத்த நிமையென்னக் காத்தாரக் ககனத்தார். 34

துன்றுங்கு முட்டடத்திற் றயசாற்றுத் துவன்கொடிபோ
லன்றுங்கு நொய்யடியா ளயர்வுற்றுச் சோர்ந்துவிழப்
பொன்றுங்கு பொறைத்திண்டோட் பொலிந்தும்பர்
தாங்கினரான்
மின்றுங்கு மலைத்தோற்றம் விளங்குவடி வொத்தனவே. 35

(மகவருட்படலம்)

3. நைடதம்

அண்டருல கத்திறைவ னவ்வுழியி றுப்ப
மண்டுபுனல் வாளைவளர் பூகமடல் கீறத்
தண்டலையு டுத்தநிட தந்தனிபு ரக்கும்
ஒண்டிறனு டைக்குருசில் செய்திறமு ரைப்பாம். 1

பூகமடல் கீறியிள வாளைபுனல் காலும்
மேகமிசை தாவிடுவி தர்ப்பநகர் மன்னன்
ஓகையொ டளித்தவுயி ரோவியநி கர்க்குந்
தோகைமண வோலைகொடு தூதுவ டைந்தார். 2

முடங்கலின் வரைந்தவுரை முற்றுமுண ராமுன்
தடம்புயம்வ ளர்ந்தனவ ரைக்குவமை சாலக்
குடங்கையி னகன்றவிழி கோநகரி செல்வான்
மடங்கலனை யானுளம கிழ்ச்சியொடெ ழுந்தான். 3

கொய்யுளைவ யப்புரவி கோடியுழை போத
மையன்மத வாரணம ருங்குறநெ ருங்க
வெய்யதிறல் வாளுழவர் வேலைபுடை சூழ
மொய்திரைய ளக்கரினி யம்பலமு ழங்க. 4

விரிகதிரெ றிக்குமதி வெண்குடைநி ழற்றத்
தரளநகை மாதர்பலர் சாமரையி ரட்ட
எரிமணியி மைக்குமுடி மன்னவரி றைஞ்சத்
திருவளரு மார்பனுயர் தேரின்மிசை போனன். 5

தேர்நடவு கம்பலைசெ விப்புகுத லோடும்
வார்கடன்மு ழக்கொலிகொ லோமழைமு ழக்கோ
சார்வதென வையமுழும் வானவர்க டம்முன்
ஏர்கெழுமு மாடநிட தத்திறையெ திர்த்தான். 6

(நள்ளிராதிப்படலம்)

4 அரிச்சந்திர புராணம்

பாருக் கொருவன் பாதார சகோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கு மறைப்பொ ருட்கும்
நேருக்கும் வீடா மனுநூனெறிக் குமபொ றைக்கும்
ஆருக்கு மிக்கா னரிச்சந்திர னுகு மென்றான். 1

அன்னா னதுகூ றிடமைந்தரை யட்ட நாளும்
முன்னா ளமர்வென் றொருதண்டின் முடித்த தாலுந்
தன்னா லுணரா தசலத்தினன் றூன மூன்று
கொன்னார் தவத்தோங் கியகௌசிகன் கூற லுற்றான். 2

வெய்யன் பதகன் பாதார விருப்பன் வீணன்
பொய்யன் னிறையும் பொறையுஞ்சிறி தும்மில் புல்லன்
கையன் கபடன் கயவன்றனை நல்ல னென்றிவ்
வையன் றிருமுன் னுரைத்தாயிதென் னாகவென்றான். 3

தீவெந் தொழிலின் றியொப்பற்றமெய்ச் செவ்வி யோனைக்
காய்வெந் திறலா விவைகூறிய கௌசி காநின்
வாய்வெந் திலைநின் மனம்வெந்திலை வம்பு சொன்ன
நீவெந் திலைதெய் வமுநின்வயிற் பொய்த்த தென்றான். 4

தெய்வந் தனைநொந் துவசிட்டனிச் செய்தி செப்பக்
கைவந் தகொடுந் தொழிற்கௌசிகன் கன்றி நோக்கிப்
பொய்வந்த நின்வாய் புழுவாகுத லன்றிப் பொய்யா
மெய்வந்த வென்வாய் மனம்வேவல வென்று சொன்னான் 5

(இந்திரகாண்டம்)

தோத்திரம்

1. திருவாசகம்

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்உருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. 2

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் — தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து. 4

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும்வந் தென்மனத்தை — அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 5

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே — சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 6

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை — யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாக்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 7

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்துகொள் நெஞ்சே எல்லாம் — தருங்காண்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
மருந்துவாய் என்மனத்தே வந்து. 8

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 9

(திருவெண்பா)

2. திருநாவுக்கரசு தேவாரம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக 184345

ஆண்டானை யடியேனை யாளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவான் படையானீ ளரவோ னுகங்
கீண்டானைக் கேதார மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு

பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானை
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 1

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தையுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்றன்னைத் தேவ தேவக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட வச்சம
பேர்த்தானைப் பிறப்பிலியை யிறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 2

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை யானை யாதிப்
புத்தேனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 3

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்பொற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா னின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 4

(புள்ளிருக்கு வேளூர்)

வேறு

தலையே நீவணங்காய்—தலை—மாலைதலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்—தலையே நீவணங்காய். 1

கண்காள் காண்மின்களோ-கடல்-நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்—கண்காள்காண்
மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ—சிவ—னெம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்றிற மெப்போதும் செவிகாள் கேண்
மின்களோ. 3

முக்கே நீமுரலாய்—முது—காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை—மூக்கேநீமுரலாய் 4

வாயேவாழ்த்துகண்டாய்—மத—யானையுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை—வாயேவாழ்த்து
கண்டாய். 5

நெஞ்சே நீநினையாய்—நிமிர்—புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலை மங்கைமணாளனை—நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர்—கடி—மாமலர்தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்தபரமனைக்—கைகாள்கூப்பித்
தொழீர். 7

ஆக்கையாற்பயனென்—அரன்—கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாத இவ்—வாக்கையாற்
பயனென். 8

கால்களாற்பயனென்—கறைக்—கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக்—கால்களாற்பயனென் 9

உற்றாருளரோ—உயிர்—கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக்—குற்றாருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ—ஈசன்—பல்கணத்தெண்ணப்
பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்—கிறுமாந்திருப்
பன்கொலோ. 11

(திருஅங்கமாலை)

3. பெருமாள்திருமொழி

தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை
விரை குழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவடன்
அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே. 1

கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்

விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மானீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே. 2

மீனோக்கு நீள்வயல்சூழ் வித்துவக் கோட்டம்மானென்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லாற் பற்றிலேன்
தானோக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தர்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே 3

வாளா லறுத்துச் சுடினு மருத்துவன்பால்
மாளாத காதனோ யாளன்போன் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மானீ
ஆளா யுனதருளே பார்ப்ப னடியேனே. 4

வெங்கட்டின் களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்
எங்குப் போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறு மாப்பறவை போன்றேனே. 5

செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டம்மாவுன்
அந்தமில் சீர்க் கல்லா லகங்குழைய மாட்டேனே. 6

வித்துவக் கோட்டம்மான்

4. தாயுமானசுவாமிகள் பாடல்

வாசாக யிங்கரிய வன்றியொரு சாதன
மனோ வாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேனுறவு
மார்க்கத்தி னிச்சைபோல
நேசா னுசாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்தபோது
நித்திரைகொள் வேன்றேக நீங்குமென வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்

பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்தமே. 1

பொன்னை மாதரைப் பூமியை நாடினேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் பெருவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே. 2

தன்ன தென்றுரை சாற்றுவ னவெலாம்
நின்ன தென்றனை நின்னிடத் தேதந்தேன்
இன்ன மென்னை யிடருறக் கூட்டினால்
பின்னை யுய்கிலன் பேதைய னாவியே. 3

ஆராவமுதே யரசே யானந்த வெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே. 4

ஆரறிவாரென்ன வனந்தமறை யோலமிடும்
பேரறிவே யின்பப்பெருக்கே பராபரமே. 5

முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழித்
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே. 6

பொய்யுணர்வா யிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையு முளதோ பராபரமே. 7

சிந்திக்குந் தோறுந் தெவிட்டா வமுதேயென்
புந்திக்கு ணீதான் பொருந்திடவுங் காண்பேனோ. 8

மாசற்ற வன்பர்நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் றேசினையுங் காண்பேனோ. 9

5. பட்டினத்தார் பாடல்

பொருளுடையோரைச் செயலினை வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடையோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தருங்கச்சி யேகம்பனே. 1

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியும்
தாயார் வயிற்றி னராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்

காயா மாமும் வறளாங் குளமுங் கல்லாவு மென்ன
வியா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே 2

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
எற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே. 3

காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுங் காசினிக்கும்
தாம்பிணங் கும்பல வாசையும் விட்டுத் தனித்துச் செத்துப்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதை யோவென்செய் வேன்றில்லைச்
சங்கரனே. 4

ஆதுற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப் பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலுநெஞ்சே யிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 5

நானெத் தனைபத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
ஏனிப் படிக்கெட் டுழலுகின் றாயினி யேதுமிலா
வானத்தின் மீனுக்கு வன்றூண்டி விட்ட வகையதுபோல்
போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே. 6

4. இதிகாசம்

1. இராமாயணம்

நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரு மனைதர வயிர்க்குஞ் சிந்தையான்
நினையவு மரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய வெய்தியே. 1

தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ்சாரணர்
நாயக னிவன்கொலன் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கவே 2

படங்கல்போன் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ

டிடங்கொ ணான்முகனையும் படைப்ப னீண்டெனத்
தொடங்கிய கோசிக முனிவன் றோன்றினான். 3

வேறு

வந்துமுனி யெய்தலு மார்பிலணி யாரம்
அந்தரநி லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கட வுடனவரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான். 4

பணிந்துமணி செற்றுபுது யிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டினித ருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் தின்றே [னும்.
துணிந்த தெம்வினைத்தொடர் பெனத்தொழுது சொல் 5

நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்தவ ணக்கவெளி வந்தவிது முந்தெங்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும். 6

வேறு

என்னனைய முனிவர்களு மிமையவரு
மிடையூறென் றுடைய ரானாற்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிகவரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
விகல்கடந்த புலவு வேலோய். 7

இன்றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையி னிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குருமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
றாள்கின்ற தரசு வென்றான். 8

உரைசெய்யு மளவிலவன் முகநோக்கி
யுள்ளத்தி லொருவ ராலுங்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னங்கே. 9

தருவனத்துள் யானியற்றுந் தகைவேள்விக்
கிடையூறாய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
விருதரிடை விலக்காவண்ணந்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதியென வுயிரீர்க்குங்
கொடுங்கூற்றி னுளையச் சொன்னான். 10

எண்ணிலா மருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனறுழைந்த
தெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றாச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் காலவேலான். 11

தொடையூற்றிற் றேன்றுளிக்கு நறுந்தாரா
னொருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னவர்பெரியோர்
பணிபிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும்
வெருண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக வென்றான். 12

என்றனனென் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி யிறுதிக் காலம்

அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்
வெயில்காந்த தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவ நெற்றி முற்றச்
சென்றனவுந் ததுநகையுஞ் சிவந்தனகண்
ணிருண்டனபோய்த் திசைக ளெல்லாம். 13

(கையடைப்படலம்)

2. மகாபாரதம்

ஈராறு மொன்றுஞ்ச ரர்க்குள்ள நாள்சென்ற வினிதம்முடன்
பாரால வருமுன்ன ரடலைவ ருறைநாடு பார்மின்களென்
ஞோராயி ரங்கோடி யொற்றர்வி டுத்தானவ் வொற்றர்களும்
வாராழி சூழெல்லை யுறவோடி விரைவின்கண் வந்தார்களே. 1
[சூழ்
காடென்று மலையென்று நதியென்று கடலென்று கடலாடை
நாடென்று நகரென்று நாடாத திசையில்லை நாடோறும்யாந்
தோடென்று தாதென்று தெரியாது மதுமாரி சொரிமாலையாய்
நீடென்று வலைபேவு மவனிக்கு ளவரில்லை நின்பாதமே, 2
[லுமா
முன்னொற்றை யிருசங்க முன்னூத வெதிர்சென்று முனைவெல்
மன்னொற்ற ரிதுகூற மதராகி வீமைந்தன் மகன்மைந்தனுக்
குன்னொற்ற ருணர்தற்கு வருமோவ றன்காளை யுறைநாடுகார்
மின்னொற்று மழைபுண்டு விளைவுண் டெனத்தேடும் விரகோதி
ஞன். 3

ஒற்றரிலொருவன்ப ணிந்தென்று மெவ்வாழ்வு முண்டாகியே
விற்றானை வெம்போர்வி ராடன்றன் வளநாடு மேம்பட்டதான்
மற்றும்பு யக்கீச கன்றானு மொருவன்னை மகள்காரணத்[ஞன்.
திற்றனெ னுஞ்சொல்லு முண்டென்று நிருபற்கெ டுத்தோதி
4

வண்டார்வி ராடன்றன் வளநாடு தண்டான்ம லைந்தேதொறுக்
கொண்டால வன்சூழ விற்சூழும் வினையங்கு றிப்போரிருப்
புண்டாகி விரைமீளு மின்றாகின் மீளாதென் னுட்கோளிதென்
றெண்டாமு மிதயத்து நிருபற்கு ரைத்தானி ரவிமைந்தனே. 5

தக்கோர்த ருஞ்சொற்கள் கேளாத துரியோத னன்சொல்லி
னன்
மிக்கோர்மி லேச்சுஞ்செ ழுந்தாம விறல்வெட்சி மிலைதோ ளினன்
திக்கோதை யெழவிம்ம முரசங்க ளரசான திரிகத்தர்கோ
னக்குரோணி படையோடு போயான டித்தான வன்சார்பிலே. 6
(நிரைமீட்சிச்சருக்கம்)

5 புராணம்

1. பெரியபுராணம்

அப்பொழுது பொற்புற திருக்கழு மலத்தோ
ரெப்பெயரி னோருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளக மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதோ ருவப்புற வுரைப்பார். 1

சிவனரு ளெனப்பெருகு சித்தமகிழ் தன்மை
யிவணிது நமக்குவர வெய்தியதெ னென்பார்
கவுணியர் குலத்திலொரு காதல னுதித்தா
னவன்வரு நிமித்தமிது வென்றதி சயித்தார். 2

பூமுகை யவிழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலைய மாருதமும் வந்தசையு மன்றே. 3

மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவுஞ்
சீலமறை யோர்களுட னேமவினை செய்தார். 4

பூதகண நாதர்புவி வாழவருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநல முய்ப்பார்
ஓதுமறை யோர்பிற துறைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும். 5

பயன்றருவ பஃறருவும் வல்லிகளு மல்கித்
தயங்குபுன லுந்தெளிவ தன்மையுட னண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்களியு மாறு
நயம்புரிவ புள்ளொலிக ளல்லதிசை யெல்லால். 6

அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்
சங்கபட கங்கருவி தாரை முதலான
வெங்கணு மியற்றுபவ ரின்றி யியம்பு
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். 7

இரும்புவன மித்தகைமை யெய்தவவர் தம்மைத
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றிற்
பெருங்களி வியப்பொடு பிரானருளி னாலே
பருந்திரு மகப்பெற வணைந்தவணி செய்வார். 8

காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொரு திளைப்பார்
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார்

(திருஞானசம்பந்த சுவாமிகள்)

2. திருவிளையாடற் புராணம்

குரவன்செங் கோல்கைக்கொண்ட குலோத்துங்க வழுதி
ணரவங்கம் பூண்ட கூட லாதிநா யகனை நித்தம் (செங்க
பாவன்பின் வழிபா டாணுப் பத்திமை நியமம் பூண்டா
னிரவஞ்சுங் கதுப்பி னல்லா ரீரையா யிரவ ருள்ளான் 1

அப்பதினா யிரவர்க்கு மொவ்வொருத்திக் கவ்வாறு
யொப்பிரிய வறுபதினா யிரங்குமா ருளரவருட்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிள வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பே ரனந்த
குணன் 2

கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமார் திறநோக்கி மகிழ்வேந்த
னலைபயின்ற கடலாடை நிலமகளை யுடலணிதோண்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள். 3

செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு செழுமறை
யோன்
பையேந்து மரவல்குன் மனைவியொடும் பானல்வாயக்
கையேந்து குழவியொடங் கடம்புகுந்து மாதுலன்பான்
மையேந்து பொழின்மதுரை நகர்நோக்கி வருகின்றான். 4

வருவானுண் ணீர்வேட்டு வருவானை வழிநிற்கும்
பொருவானந் தடவுமொரு போராலி னீழலின்கி
ழொருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை யிருக்குமிடந் தலைப்படுமுன். 5

இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னு ளெய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்ததுகா
லலைத்தலைய வீழ்ந்தும்மை வினையுலப்ப வாங்கிருந்த
வலைத்தலைய மானோக்கி வயிறுருவத் தைத்தன்றால் 6

அவ்வாறவ் வணங்கனையா ளுயிரிழந்தா ளவ்வேளைச்
செவ்வாளி யேறிட்ட சிலையுடையா னொருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழறேடி
யவ்வால நிழலெய்தி யயனின்றா னிளைப்பாற 7

தண்ணீர்க்குப் போயாலி தலைப்பட்ட மறையவனு
முண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த குழவியொடும்
புண்ணீரவெள் ளத்துக்கா றாழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான். 8

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றாண் மருங்கணைந்தென்
னுயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதென மத்தெறிதண்
டயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினான். 9

இனையதோர் பெண்பழியை யாரேற்றா ரென்றோர்வா
னனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலு
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன் றனைக்கண்டான். 10

VI. ஒழிபு

1. இளவேனிற் காலம்

முள்ளரை முருக்கு மந்தி முளையிளந் திங்கள் காட்டுங்
கள்ளக முகிழ்ப்ப லாசங் கடிமல ரவிழ்ந்த தோற்றந்
தள்ளரில் சிறப்பின் வேனி றண்பனிப் பகையி ருந்த
வொள்ளெழி னகர மெல்லா மொருங்கெரி யூட்டிற் றற்றே 1

இந்நில வரைப்பி னுள்ளோர் யாவர்க்குங் கேள்வி யின்பந்
தன்னொடு பிறந்த வந்தீந் தமிழ்கொடுத் தாங்கு விண்ணோர்

பொன்னக ரனைவு கோட்டுப் பொதியமீன் குழவித் தென்றன்
மன்னிய வுயிர்கட் கூற்றின் வருமின்பம் விளைத்த தன்றே. 2

(சீகாளத்திப் புராணம்)

2. முதுவேனிற் காலம்.

இன்னிள வேனில் செல்ல விருங்கடல் சுவற விண்டோய்
சென்னியங் குன்ற மெல்லாந் திசைமுக மழற்றச் செங்கேழ்ப்
பன்னிரு சுடரு மொன்றாய்ப் பகற்கதிர் பரப்பி யாங்கு
மன்னுயிர்த் தொகைவெ தும்ப வந்தது முதிய வேனில். 1

வெந்தழ னிலத்து வெண்டேர் மென்புன லெனம யங்க
விந்திர சாலஞ் செய்த தெறிவழி மாமுந் திப
நந்தவில் பெருஞ்சி றப்பு நல்குகண் ணோட்ட மில்லாச்
சிந்தையர் கடுஞ்சொலென்னத் தீமுகந் திறைத்த தன்றே. 2

நீடழல் வெஞ்சு ரத்து நீரின்றி நாவு லர்ந்து
வாடுபு நிழல்பெ றாது வருந்துபு திரியு மாக்கள்
கோடிய கோல னாகிக் குடிகெட வலைக்குங் கல்லார்க்
கூடிய வறனில் வேந்தன் குடைபெறாக் குடிக ளொத்த. 3

நெடுநெறி மாங்க ளெல்லா நீணிதி யோடு சுற்றத்
தொடர்புடை யவர்போன் மக்கட் டொகுதியாற் சூழப்பட்ட
தொடுகழல் கிழிக்குங் கூர்ங்கற் சுடுபர லொடுவி ராய
வடுதழற் சுரங்க ளெல்லா மாள்வழக் கற்ற வன்றே. 4

(சீகாளத்திப் புராணம்)

3 கார்காலம்

குயினெலா மன்ன வென்னக் குரைகட லுடைச் சென்று
வயினிரு புடையும் விம்ம வாய்மடுத் துண்டு தோகை
மயில்கள்போற் குன்ற நாடி வந்துநீள் சிமைய முற்றி
வியனிரு விசும்பெ ழுந்து விரிகட லுமிழ்ந்த மன்னோ 1

தடங்கடல் குறைய வுண்ட தழங்குரற் கொண்டல் வான
மடங்கலுங் கவிந்து விண்டோ யடுக்கல்கள் புதைய நின்று
குடங்கொடு சொரிவ தென்னக் குளங்கள்கோ ளுடைய
வெய்யோன்
சுடுங்கதி ருலகம் வேட்பச் சோவெனச் சொரிந்த தன்றே 2

(சீகாளத்திப் புராணம்)

4. கூதிர்காலம்

உடலலை குளிரினுக் குடைந்த வில்லவர்
தடவினு னெருப்பினைத் தணத்த லஞ்சினர்
கடவுளர் பசிப்பிணி களையும் வேள்வியிற்
சுடாழல் பிரிகலாத் தொழுகு லத்தர்போல். 1

தண்டையஞ் சீறடித் தருண மைந்தரும்
வெண்டயிர் வெண்ணெய் மோர் வெறுத்து வேட்டன
ருண்டொறும் வெய்யன வுணவு நீரிடங்
கொண்டன வுயிர்களுங் குளிர்க்கு டைந்தவே 2

எரிசுடர் நெருப்பைநீ ரென்ன வேட்டனர்
தருகுளிர் நீரினைத் தழுவி னஞ்சின
ரிருசெவி களுந்துகி லிறுகச் சுற்றுபு
விரனிரை மறைபட மெய்ப்பை புக்கனர். 3

(சீகாத்திளப் புராணம்)

5. பனிக்காலம்

திருமலர் முதலிய திகைப்பப் புன்புலம்
வருவன பயிர்சில மகிழ வந்தன
விருபனி யிருதுவும் யாவர் யாவர்க்கு
மொருநிகர் நடையின ருலகிற் றேரினே. 1

கண்ணக னுலகெலாங் கவைஇய தண்பனி
விண்ணுயர் வரைகளும் வேலை ஞாலமு
மண்ணனி டிமயமு மதனைச் சூழ்தரு
மண்ணுமா யினவென மருளச் செய்ததே. 2

வளர்பசும் புற்செறி வயின்றொ றும்பனித்
துளிசுட ரிளங்கதிர் தொடவி ளங்குவ
வொளிர்மா கதத்தக டுறவ முத்திய
நளிகொள்செம் மணிகளை நகுதல் செய்யுமே. 3

[சீகாளத்திப் புராணம்]

6. கருப்பக்காலம்

காலை தண்பனி சொரிதலு நண்பகற் கால
நீல வான்புதை முகிலினம் பெய்வபோ னின்று

மாலை தோன்றுமுன் மலர்தலை வான்கழு வியது
போல நீங்கலு நிகழ்ந்தன மழைவளம் பொன்ற. 1

பெயல்வ றந்தபைங் கூழெலாம் பீளொடு கரிந்த
பயம்வ றந்தன மரங்களு மலைகளும் பணிநீர்க்
கயம்வ றந்தன கள்ளியும் பெண்ணையும் கதிரின்
வெயிலின் வெந்ததம் பசுமைபோ யுலர்ந்தன மிகவும். 2

உண்ப தின்பன நனிமிகக் குறைந்தன வொருங்கு
வெண்க லங்களும் வெள்ளியுஞ் செம்பொனும் விளங்கு
மண்கொ ளொண்பது வகைபநன் மணிகளு மலிந்த
வெண்ப தம்பெற வரியதா யிற்றுமன் யார்க்கும். 3

நீடுந் தீப்பசி யாற்சுடர் கொளுந்திய நிலத்தோ
ராடுந் தின்கலா வடகுதின் றனர்நில னகழ்ந்து
வாடும் பலவகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரம்பினர் தின்பன கருதி. 4

சிறுவர் கையன தாயர்தாம் பறித்தனர் தின்றார்
முறுகு தீப்பசி பொறுக்கலார் மக்களென் முதலா
வுறுப சுந்தசை யாவையுந் தின்றன ருலகத்
தறைப ழஞ்சொலைப் புதுக்கினர் மானமாண் பற்றார். 5

(சோளத்திப் புராணம்)

7. சீட்டுக்கவி

மாபுதவி யாதவன் சோமசுந் தரகுரு பலர்ப்பதம் பரவு, தாசன
வண்டமிழ்ச் சரவணப் பெருமாள் கவிச்சக்ர வர்த்தி தேர்ந்
தெழுதுநிருபம்; வளர்காரை யம்பதியின் மேவுதுரை லக்ஷ்ம
மந்திரியெதிர் கொடுகாண்க. பா, வாணருக் குபகாரி [ணா
நீயாகை யாலெமது வல்லமையு மகிமையுங் கேள்: — 1

கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்லவாய்
கனவேலு மயிலுமென்னக், காலிலொரு கவிதையுயர்
தோளிலொரு கவிதையிரு கையிலொரு
கவிதையெழுதக், கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு
புறஞ்சொலக் காணாத திரைமறைவிலே, கனசூது
சதுரங்க பொடுகுதிரை யடிசெலக் கன்னெல்லு முதாகி
லெண்ணாய். 2

பரிவுபெற் றப்புதுச் சேரியிற் சென்றினிய பண்பரிற்
சினையவர்த்தி, பண்புள குமாரபா ரதிமதுர கவிவீர பத்ர—
கவி கொண்டாடவே, பாக்கியனா னந்தனா தன்சபையி
லுஞ்செய்து பல்லக்கு வரிசைபெற்றேன், பலகாவி யங்க—
ளுந் தெரிவே னளப்பரிய பஞ்சலட் சணமுமறிவேன். 3

அரசரி லுயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி யாகுமவன்
மணிவாயிலில், அகஸ்திய முனிக்குமதி கங்கற்ற பேர்களா
யிரங்கவி வாணருண், டவரிலொரு சிறுவன்யான்
பாடவறி யானென் றகற்றிவிட் டார்களென்னை, ஆத—
லாற் பூமியிற் சஞ்சரித் தேனின் னகந்தனில் மகிழ்ந்தருள்
வையே. 4

8 தனிப்பாசுரத் தொகை

கல்வியே! மக்கடங் கண்ணே! புலவர்தஞ்
செல்வியே! மனத்தின் செவ்விய வுணவே!
நின்னொடு பயிறன் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறர்க்குந் தனிப்பே ரின்பங்
கரும்பயி றற்குக் கைக்கூலி போலத்
தரும்பொரு ளே!உயர் தகைமுத்தி வித்தே!
பரந்த பாரினும் விரிந்த வானினும்
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்!
கருத்தினிற் களிப்பை; உரைப்பை யாற்றுரை;
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவுநன் றோடே! எதுவுநல் லாரே!
ஆகவு மென்கொ லநேகர்
ஊகமின் றிநா ளலைப்பவிட் டனரே? 1

(கல்வி)

அந்தாதி

வாழ்த்திட நாவுண்டு பாவிக்க நீயுண்டு மண்ணிலுறத்
தாழ்த்திடச் சென்னியு முண்டுகண் டாய்தண் களவின்மலர்
ஊழ்த்திட நீமல் உறைவார் அடியுண் டுனைநிரபம்
வீழ்த்திடு வாருமுண் டோநெஞ்ச மேயென் மெலிவதுவே. 1

மெலிவிக் ... நமுயிர்
நலிவிக்கு ... லரால்
மலிவிக்கும் ... கூன்பிறை வாணிலவால்
பொலிவிக்கு ... சடையார் தடுத் தாளப் புகுந்தபின்னே. 2

புகுவது மூப்பு வனடபோ டிளமையும் போயதினி
மிகுவது நோயும் துயருமென் றுலடல் மேவலரூர்
நகுவதன் முன்னெரித் தோர்கள வீசனை நாம்பணியத்
தகுவது காமெனஞ்ச மேயிது போலுஞ் சதுரில்லையே. 3

(திருக்கருவைக் கலித்துறையந்தாதி,

சலம்பகம்

அழகுற்றதொர் மதுரேசனை அமரேசன் எனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமுறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகும் அப்பா
பழுதற்றதொர் சான்றுண்மை பயின்றார்தினம் முயன்றால்
பலமுண்டதின் நலமுண்டவர் அறிவார்பல கலைநூல்
எழுதப்படும் எடுண்டவ வீடுந்தர வற்றால்
எழுதாததொர் திருமந்திரம் இளம்பானையுள் உண்டே.

கோவை

அணியும் அமிழ்துமென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை யோனடி வாழ்த்தலரில்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெரும் தோளி படைக்கண்களே. 1

வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயின் நீக்கிஇக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனய வேன்தெய்வம் மிக்கனவே. 2

(திருக்கோவையார்)

பிள்ளைத்தமிழ்

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றே நின்றாடும்
குழலிசை பழகிய மழைமுகில் எழவெழு கொம்பே வெம்பாசம்
மருவிய பிணிகெட மலைதரும் அருமைம ருந்தே சந்தானம்
வளர்புவ னமுமுணர் வருமரு ... யின்வ ரம்பே செம்போதிற்

கருணை ... ண்சோதிக்
கலைமதி மரப ... என்றோதும்
திருமகள் கலைமகள் தலைமக ... செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொரா ... செங்கோ செங்
கீரை.

(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

சதகம்

புருவநெறி யாமல்மணி எயிறு தோன்றாமல் விழிபுரளாமல்
அங்கசேட்டை, புரியாமல் மிகுதலையை அசையாமல்
மிடறுதான் பொருமி விம்மாமல் இயல்பாச, சுருதிலய
சாஞான நீதியொடு வீணையின் தொனியினு தப்பிரமமாய்த்
துய்யதந் திரியோசை மிடறோசை:எனவேறு
தோன்றாமல் இன்பநயமாய்த், தருமதுர அமுதரசம்
ஒழுகுசா ரிகள்பழகு சங்கீத வித்தை யென்றால்,
சகலர்க்கும் ஆனந்த மாகுமது பாடுமவள் சரசகுண
வஞ்சியெனிலோ, மருவியிதழ் பருகியணையா மனுயிர்
உய்யுமோ மணவாள நாராயணன், மனதிலுறை
அலர்மேலு மங்கை மணவாளனே வ தவேங்கடராயனே.

[திருவேங்கட சதகம்]

அறக்கடல் நீயே அருட்கடல் நீயே அருங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே நிகர்கடந் துலகின் நிலையுநீ உயிருநீ நிலைநான்
பெறக்கடல் நீயே தாயுநீ எனக்குப் பிதாவுநீ அனைத்துநீ அன்
றே. 1

தேறுந் தயையின் முனிவோய்நீ சினத்திற் கருள்செய் கனி
வோய்நீ
கூறுங் கலையற் றுணர்வோய்நீ கூறந் தொனியற் றுரைப்
போய் நீ
மாறும் பொருள்யா வினுநின்றே மாறுநிலைகொள் மாயோய்நீ
ஈறும் தவிர்ந்துன் புகழ்க்கடல் ஆழ்ந்திதெனக்கே கரைகாட்டரு
ளாயே. 2

184345

ஒளிநாக் கொடுவான் சுடர்புகழ ஒளிநாக் கொடுபன் மணிபுகழக்
களிநாக் கொடுபற் புள்புகழக் கமழ்நாக்கொடுகா மலர்புகழத்
தெளிநீர்க் கொடுநீர்ப் புனல்புகழத் தினமே புகழப் படுவோய்நீ
அளிநாக்கொடுநாள் உனைப்புகழ அறியாமூகை உணர்த்தாயோ. 3

[தேம்பாவணி]